DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C. No. 1 / 2026 |
| Prosecution Witness | : | P.W. 3 |
| Name | : | வீரக்கதிரவன் |
| Father's /Husband Name | : | சுப்பிரமணியன் |
| Village | : | நன்னிலம் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 32 |
| Occupation | : | இரண்டாம் நிலை காவலர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 18th February, 2026 Accused present.

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.12.2025ம் தேதி நன்னிலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது 20.12.2025ம் தேதி அதிகாலை 2.45 மணி அளவில் இரண்டாம் நிலை காவலராக எங்கள் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்த ஆதவன் என்பவர் இரவு பாரா பணியில் இருந்தபோது காவல் நிலையத்திற்கு எதிரே வசிக்கும் ஆஜர் எதிரி அவரது குடும்பத்தினருடன் சண்டை போடும் சத்தம் கேட்டு காவலர் ஆதவன் எதிரியிடம் கேட்டதற்கு அதற்கு எதிரி அவரை போலிஸ் என்றால் பெரிய ஆளு புண்டையா என்று அசிங்கமாக பேசி பிரச்சனை செய்ததாகவும் அது பற்றி காவலர் ஆதவன் நிலைய ஆய்வாளரிடம் தகவல் தெரிவிக்க வேண்டி நிலையத்தினுள் சென்ற போது ஆஜர் எதிரி அவரது வீட்டிற்கு சென்று ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு காவல் நிலையத்திற்கு உள்ளே நுழைந்து காவலர் ஆதவனை கத்தியை காண்பித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும், அவரது அரசு பணியை செய்ய விடாமல் தடுத்ததாகவும் 20.12.2025ம் தேதி காவல் நிலையத்திற்கு பணிக்கு சென்ற போது சம்பவம் பற்றி கேள்விப்பட்டு அறிந்து கொண்டேன். இது பற்றி விசாரணை அதிகாரி விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u> :–

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் எத்தனை மணிக்கு என்னை விசாரித்தார் என்றால் மாலை 6.00மணிக்கு மேல் தான்

விசாரித்தார். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா1 எங்கள் காவல் நிலையத்தில் பணி செய்பவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் சிசி டிவி கேமரா உள்ளது என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2026.02.18 16:21:59 +0530

District Munsif -Cum- Judicial Magistrate,
Nannilam.